கொசவன்பாளையம் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல் முறைகள்
முன்னிலை திரு.அன்னகுமார் அவர்கள்

ந.க. 92 / 2024-2025 நாள் : 24-09-2024

பொருள் மனைஉட்பிரிவு வரைபடம் பூவிருந்தவல்லி கொசவன்பாளையம் ஊராட்சி

கொசவன்பாளையம் கிராமம் சர்வே எண் : 418/3B Thiru.J.BASKARAN என்பவருக்கு மனைபிரிவு அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை
1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை - 8 அவர்களுக்கு கடித எண் மற்றும் இவ்வலுவலக குறிப்புகள்
2. ஆணையர் பூவிருந்தவல்லி ந.க.எண்: 2895 / 2024 / அ3 நாள் : 03-09-2024
3. மனுதாரர் கடிதம் நாள் : 24-09-2024
4. ஊராட்சிபலவகைரசீதுஎண் : 2024-2025 / 2 / 14 / 13 / 7 / 83

உத்தரவு:

பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு மணைஉட் பிரிவு செய்து கீழ்கண்டவாறு கட்டிட மற்றும் மனைஉட்பிரிவு விதிகளுக்கு உட்படுத்த ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களை கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துத்தர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனையில் முனைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும.
3. அங்கீகரிக்கபட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தகூடாது.
4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும் தவிர எக்காலத்திலும் கட்டிடம் மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அகைப்பையோ மாற்றப்படுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்தகூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும் மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாது. சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாகிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, மல அறை, எரு குழி, மாட்டுத்தொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
7. ஊராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

8. கடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமாக தரைகளை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் கழனி ஏற்படுத்தக் கூடாது.
9. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுத்துவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனை பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கபட்ட மணைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இனணப்பு மனைஉட்பிரிவு வரைபடம்

[redacted]
[redacted]

பெறுநர் :
J.பாஸ்கரன்
எண் : 3, மேட்டு தெரு,
திருநின்றவூர்,
சென்னை - 602024.

நகல்: செயலாளர்
சென்னை பெருநகரவளர்ச்சிக்குழுமம்,
சென்னை - 600 008.

Scanned with OKEN Scanner